செ.வெ.எண்: 63 நாள்: 23.02.2017

# ஜல்லிக்கட்டு போட்டிகளில் அனைத்து விதிமுறைகளையும் முறையாக கடைபிடிக்க வேண்டும் - மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்.

புதுக்கோட்டை மாவட்டத்தில் ஜல்லிக்கட்டுப்போட்டி நடத்தப்படவுள்ள இடங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் இன்று (23.02.2017) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்து கூறியதாவது:

புதுக்கோட்டை மாவட்டத்தில் உச்சநீதிமன்ற வழிகாட்டுதலின்படி ஜல்லிக்கட்டுப் போட்டி நடத்தப்பட்டு வருகிறது. அதனடிப்படையில் நமது மாவட்டத்தில் புதுக்கோட்டை ஒன்றியம், கவிநாடு கண்மாய் மற்றும் பொன்னமராவதி ஒன்றியம், இடையாத்தூர் ஆகிய இடங்களில் ஜல்லிக்கட்டுப் போட்டி நடத்துவதற்கு மேற்கொள்ளப்பட்டு வரும் பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்யப்பட்டது. இந்த ஆய்வில் காளைகள் அவிழ்த்து விடும் இடம், காளைகள் பரிசோதனை செய்யும் இடம், காளைகள் செல்லும் இடம், பார்வையாளர்கள் அமரும் இடம், முக்கிய பிரமுகர்கள் அமரும் இடம், பாதுகாப்பு தடுப்புக்கட்டைகள் அமைத்தல், காளைகள் பதிவு செய்யுமிடம் உள்ளிட்ட பல்வேறு பாதுகாப்பு வசதிகள் ஆய்வு செய்யப்பட்டது. மேலும் இந்த ஆய்வின் போது அனைத்து பாதுகாப்பு ஏற்பாடுகளையும் முறையாக செய்து ஜல்லிக்கட்டை சிறப்பாக நடத்த சம்மந்தப்பட்ட அலுவலர்கள் மற்றும் விழா கமிட்டியாளர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது என்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் கூறினார்.

இந்த ஆய்வின் போது மாவட்ட காவல் கண்காணிப்பாளர் முனைவர்.ஜெ.லோகநாதன்,இ.கா.ப., புதுக்கோட்டை சார் ஆட்சியர் திரு.எஸ்.பி.அமரித்,இ.ஆ.ப., இலுப்பூர் வருவாய் கோட்டாட்சியர் திரு.மு.வடிவேல்பிரபு மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**